பாடம் : கிறிஸ்தவம்

அலகு 01 தரம்: 7

## எம்மைப் பாதுகாக்கும் படைப்பாளன்

### பகுதி 1

1. கடவுள் தாம் உருவாக்கிய மனிதனை எங்கே வாழவைத்தார்?
   ஏதேன் தேட்டத்தில்

2. இறை தந்தை மனிதனை எதனால் உருவாக்கினார்?
   பூமியின் மண்ணினால்.

3. இறைவன் மனிதனுக்கு கொடுத்த பொறுப்பு யாது?
   ஏதேன் தோட்டத்தைப் பாதுகாத்தல்.

4. படைப்பைப் பற்றிக் கூறும் திருவிவிலிய நூல் எது?
   தொடக்க நூல்.

5. சிறுவர் நலனுக்கான தொலைபேசி இலக்கம் யாது?
   1929

6. படைப்பில் முதலிடம் வகிக்கும் படைப்பு யாது?
   மனிதப்படைப்பு.

7. கிறிஸ்தவர்கள் எவற்றை நாட வேண்டும்?
   இறை ஆட்சியையும் அவற்றிற்கு ஏற்புடையவற்றையும்.

8. இறைவன் எமது தேவைகளை சரியான முறையில் எப்போது அருளுவார்?
   இறைவனில் விசுவாசம் கொண்டு அவருக்கு உரிய பிள்ளைகளாக வாழும்போது.

9. பிள்ளைகளின் வாழ்வில் அலங்காரத்தையும் பெறுமதிகளையும் முக்கியமானதாகக் கருதியவர் யார்? இயேசு

10. நீர் வாழும் சூழலில் உள்ள சிறுவர்களுக்கு துன்பம் ஏற்பட்டால் அந்நிலையில் உமது பொறுப்பு யாது? அந்நிலையில் இருந்து அவர்களை மீட்டுக்கொண்டு வருதல்.

------------------------------

### பகுதி -2

1. இன்று சமுதாயத்தில் பிள்ளைகளிற்கு ஏற்படும் துன்பங்கள் ஐந்து தருக.
   - பலவித சூழல் அனர்த்தங்களால் தனிமையாக்கப்படல் (மண்சரிவு, வெள்ளப்பெருக்கு, வறட்சி)
   - ஏழைகள் ஆனபடியால் வீதியில் வீசப்பட்ட குழந்தைகள்
   - பலவிதமான துஸ்பிரயோகங்களுக்கு உட்படல்
   - சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல்
   - யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள்

2. பிள்ளைகளின் உரிமைகளை பாதுகாக்கும் நிறுவனங்கள் எவை?
   - சிறுவர், பெண்களுக்கான அமைச்சு
   - சிறுவர், பெண்களுக்கான இலங்கை காவல்த்துறை
   - சிறுவர் நன்நடத்தை பாதுகாப்புத் திணைக்களம்
   - ஐக்கிய நாட்டு சபையின் பிள்ளைகளுக்கான பாதுகாப்பு நிதியம்
   - அரச சார்பற்ற தனியார் நிறுவனங்கள்

3. குற்றச்செயல்களுக்கு உள்ளாகும் சிறுவர்களுக்கு நீதிமன்றத்தின் கட்டளைகளிற்கு பாதுகாப்பு வழங்கும் நிறுவனங்கள் எவை?
   SOS நிறுவனம், இலங்கை இரட்சணிய சேவை, சிறுவர் பராமரிப்பு இல்லங்கள்

4. மேற்குறிப்பிட்ட நிறுவனங்களின் பணிகள் எவை?
   இன்றைய சிறுவர்களைக்கு ஏற்படும் துன்பங்கள் குறித்து அறிவூட்டி, அவ்வாறான செயற்பாடுகளைத் தவிர்த்து நேர்மையான வழியில் செயற்பட உதவுதல்.

## அலகு-02

### படைப்பை நாம் பாதுகாப்போம்

**பகுதி - 1**

1. கடவுள் படைத்த உலகை பாதுகாப்பது யாருடைய பொறுப்பு?
   மனிதர்களாகிய எமது பொறுப்பு

2. ஏதேன் தோட்டத்தை பாதுகாத்தல் என்றால் என்ன?
   முழுப்படைப்பையும் பாதுகாத்தல்

3. கடவுளின் படைப்பு எவ்வாறு பாதிப்படைகின்றது?
   மனிதனது சுயநலமான செயற்பாட்டால்

4. படைப்பின் மட்டில் மனிதனது பொறுப்பு யாது?
   படைப்பை விருத்தி செய்வதும் அதிலிருந்து பயனைப் பெறுவதும்

-----------------------------

**பகுதி - 2**

1. கடவுள் மனிதனுக்கு வழங்கிய பொறுப்புக்கள் எவை?
   - பிள்ளைச்செல்வங்களைப் பெறுதலும் விருத்தி செய்தலும்
   - விலங்குகளைப் பாதுகாத்து ஆளுதல்
   - மண்ணுலகை ஆளுதல்
   - மண்ணுலகை பாதுகாத்துப் பயன்படுத்துதல்

2. மனிதன் மூலமான கடவுளின் படைப்புக்கள் அழிவுக்குள்ளாகும் சந்தர்ப்பங்கள் எவை?
   - மரங்களை வெட்டி காடுகளை அழித்து தரையாக்குதல்.
   - அசுத்தமான தண்ணீரை சுத்தமான ஆற்று நீரில் கலக்கச் செய்தல்.
   - தொழிற்சாலையில் ஏற்படும் நச்சுக்கள் மூலம் வளி மாசடைதல்.
   - கழிவுப்பொருட்களை வீசுவதால் சூழல் மாசடைதல்.

3. சூழல் மாசடையும் நிலமைகளில் இருந்து பாதுகாப்பதற்கு நாம் பின்பற்றக்கூடிய வழிமுறைகள் எவை?
   - வீட்டுச்சூழலைப் பாதுகாத்தல்.
   - பாடசாலைச்சூழலை சுத்தமாக வைத்திருத்தல்.
   - பொருட்களை சிக்கனமாக பயன்படுத்துதல்.
   - சூழலில் உள்ள மரம் செடி கொடிகள் விலங்குகளைப் பாதுகாத்தல்.
   - பொலித்தீன் பிளாஸ்ரிக் போன்ற உக்காத பொருட்கள் பாவிப்பதைக் குறைத்தல்.

4. படைப்புக்கள் மட்டில் எமது கடமை பொறுப்புக்கள் யாது?
   - எம்மிடம் கடவுள் கொடுத்த வளங்களை தேவைக்கேற்ற முறையில் பயன்படுத்த வேண்டும்.
   - எமக்குமட்டுமல்லாது பிறரின் வாழ்விற்கும் பாதுகாப்பான சூழலைப் பெற்றுக் கொடுத்தல்.

அலகு-03

## இறைபடைப்பின் நிலையான தன்மை

### பகுதி - 1

1. திண்மம் திரவம் ஆவி நிலையில் இருக்கும் இறைபடைப்பு எது?
   நீர்

2. காலை வேளையில் உலகை வெளிச்சமாக்கும் இறைபடைப்பு?
   சூரியன்

3. பூமியில் நிகழும் தொடர் படைப்புக்களுக்காக நாம் என்ன செய்ய வேண்டும்?
   இறைவனுக்கு துதி செலுத்த வேண்டும்.

-----------------------------

### பகுதி – 2

1. பூமியில் சுழற்சி முறையில் முன்னோக்கி செல்லும் இறைபடைப்புக்கள் எவை?
   - மழைபெய்தல்.
   - விதையிலிருந்து பயிர் முளைத்தல்.
   - கடல் அலை மட்டம்.
   - புதிய குழந்தை பிறப்பு.
   - இரவு பகல் உண்டாகுதல்.
   - பருவ காலங்கள் உண்டாகுதல்.
   - முட்டையில் இருந்து புதிய உயிர் உண்டாக்குதல்.
   - இதய செயற்பாடு.

2. தொடர் இறை செயற்பாடுகளிற்கு எம்மால் பங்களிக்கக்கூடிய சந்தர்ப்பங்கள் எவை?
   - இயற்கையான காடுகளைப் பாதுகாத்தல்.
   - சுற்றியுள்ள சூழலில் அமைந்துள்ள செடி மரம் கொடிகளைப் பாதுகாத்தல்.
   - தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துதல்.
   - சூழலில் வாழும் விலங்குகளின் வாழ்வைப் பாதுகாத்தல்.
   - விளைநிலங்களை மண்ணிட்டு நிரப்பிவேறு தேவைகளுக்கு பயன்படுத்துவதைத் தவிர்த்தல்.

அலகு - 04

## மாறா அன்பு நிறைந்த இறைவன்

### பகுதி - 1

1. ஆண்டவரின் நிலையான அன்பை வெளிக்காட்டும் திருப்பாடல் எது?
   திருப்பாடல் 103

2. எப்போதும் எம்மை நல்வழியில் நடத்துவது எது?
   ஆண்டவரின் நிலையான அன்பு

3. குடும்பத்தை உருக்கியவர் யார்?
   இறைவன்

4. குடும்பத்தினூடாக உருவாகுவது எது?
   சமுதாயம்

5. உயர்ந்த சமுதாயத்தை உருவாக்குவதற்கு வழிவகுப்பது யாது?
   அனைவரும் ஒரு குடும்பமாக வாழும் போது எம்மில் வரும் பெறுமதிகள்.

----------------------------------

### பகுதி - 2

1. ஆண்டவரின் நிலையான அன்பினூடாக எமக்குக்கிடைக்கும் அருட்கொடைகள் எவை?
   - நோயற்ற வாழ்வு.
   - அன்பும் இரக்கமும் நிறைந்த வாழ்வு.
   - இரக்கத்தில் பூரணமான வாழ்வு.
   - இறைபயமுள்ள வாழ்வு.
   - நீதியான நேர்மையான எளிமையான வாழ்வு.
   - அனைத்து பாவங்களில் இருந்து மீட்பு பெறும் வாழ்வு.

2. குடும்பமாகவும் சமூகமாகவும் நாம் ஒன்றாய் வாழும் போது கிடைக்கும் பெறுமதிகள் எவை?
   - பாசம்
   - பாதுகாப்பு
   - அர்ப்பணிப்பு
   - தைரியப்படுத்தல்
   - மன்னிப்பு வழங்குதலும் பெறுதலும்

3. ஆண்டவருக்கு அஞ்சி வாழ்வதற்கு நாம் செய்ய வேண்டியவை?
   - இறைவார்த்தையை வாசித்து தியானித்தல்.
   - தினம் தோறும் இறைவனோடு தொடர்பு கொள்ளல்.
   - ஆண்டவரின் கட்டளைக்கு கீழ்ப்படித்தல்.
   - ஞாயிறு ஆராதனையில் பங்குகொள்ளல்.
   - எப்போதும் நல்லவைகளுக்கு முதலிடம் கொடுத்து செயற்படல்.
   - சமய காரியங்களில் ஆர்வத்தோடு பங்குகொள்ளுதல்.
   - சமூகத்தில் இறைபிள்ளையாக முன்மாதிரிகையான வாழ்க்கை வாழுதல்.

அலகு-05

## தூதுப்பணியின் செயற்பாடு

### பகுதி - 1

1. இயேசுவிற்கு முன்னோடியாக தூதுப்பணியாற்றியவர் யார்?
   திருமுழுக்கு யோவான்

2. திருமுழுக்கு யோவானின் பெற்றோர்கள் பெயர் யாது?
   செக்கரியா எலிசபெத்

3. திருமுழுக்கு யோவானின் விசேட பணியைக் குறித்து இறைவாக்குரைத்தவர் யார்?
   இறைவாக்கினர் ஏசாயா.

4. திருமுழுக்கு யோவான் பணிக்காக தன்னை ஆயத்தம் செய்த இடம் எது?
   யூதேயா பாலைவனம்

5. திருமுழுக்கு யோவானின் உணவு யாது?
   காட்டுத்தேனும், வெட்டுக்கிளியும்

6. திருமுழுக்கு யோவானின் உடை யாது?
   ஒட்டக முடியினாலான ஆடை.

7. ''விரியன் பாம்புக்குட்டிகளே'' என திருமுழுக்கு யோவானால் கடிந்து கொள்ளப்பட்டவர்கள் யார்?
   பரிசேயர் சதுசேயர்

8. மக்கள் ஏன் திருமுழுக்கு யோவானிடம் வந்தனர்?
   யோர்தான் ஆற்றில் பாவமன்னிப்புக்கான திருமுழுக்கு பெறுவதற்கு.

9. தம்மை ஆபிரகாமின் குமாரர் என எண்ணிப் பெருமைப்பட்டவர்கள் யார்?
   பரிசேயர், சதுசேயர்.

---------------------------------------

### பகுதி – 2

1. திருமுழுக்கு யோவானின் போதனை எவ்வாறு அமைந்திருந்தது?
   ''மனம் மாறுங்கள் ஏனெனில் விண்ணரசு நெருங்கி விட்டது'' என்று.

2. திருமுழுக்கு யோவானிடம் திருமுழுக்குப் பெற வந்தவர்கள் யார்?
   எருசலேமிலும் யூதேயாவிலும் யூதேயாவின் யோர்தான் ஆற்றை அடுத்துள்ள பகுதிகளனைத்திலுமுள்ள மக்கள்.

3. திருமுழுக்கு யோவான் தனது தாழ்மையை எவ்வாறு வெளிப்டுத்தினார்.
   ''நான் உங்களுக்கு தண்ணீரால் திருமுழுக்குக் கொடுக்கிறேன். எனக்குப்பின் ஒருவர் வருகிறார், அவர் என்னைவிட வலிமை மிக்கவர். அவருடைய மிதியடிகளைத் தூக்கிச் செல்லக்கூட எனக்குத் தகுதியில்லை'' எனக்கூறி.

4. இயேசு எதனால் திருமுழுக்கு தருவார் என திருமுழுக்கு யோவான் கூறினார்?
   தூய ஆவி எனும் நெருப்பால்.

5. திருமுழுக்கு யோவானின் பணியின் மூலம் எமக்குக்கிடைக்கும் படிப்பினைகள் யாது?
   மனதாலும், வார்த்தையாலும், செய்கையாலும நாள்தோறும் நாம்செய்யும் பாவங்களைக் குறித்து உண்மையாய் மனம் வருந்தி இறைவனின் மன்னிப்பைப் பெற்று புது வாழ்வு வாழ்வதற்கு செயற்பட வேண்டும்.

## அலகு – 06

## சோதனையில் வெற்றி

### பகுதி – 1

1. இயேசு யாரினால் பாலை நிலத்திற்கு அழைத்துச்செல்லப்பட்டார்?
   தூய ஆவியால்

2. .யேசு எத்தனை நாட்கள் அலகையால் சோதிக்கப்பட்டார்?
   40 நாட்கள்

3. வானத்தில் இருந்து அடையாளம் ஒன்றைக் காட்டுமாறு கேட்டவர்கள் யார்?
   பரிசேயர்

4. சிலுவையில் அறையப்பட்ட இயேசுவைப் பார்த்து அவ்வழியில் சென்றவர்கள் கூறியது யாது?
   "சிலுவையில் இருந்து இறங்கி உன்னையே விடுவித்துக் கொள்" என்று.

5. "பிறரை விடுவித்தான் தன்னையே விடுவிக்க முடியவில்லை" என்று இயேசுவை ஏளனம் செய்தவர்கள் யார்?
   தலைமைக்குருக்களும் மறைநூல் அறிஞரும்.

6. கெற்சமனே தோட்டத்தில் இயேசுவைப் பலப்படுத்தியவர் யார்?
   வானதூதர்

7. இயேசுவை ஏளனம் செய்த போது அவரது பிரதி நடத்தையாக என்ன செய்தார்?
   மறுமொழி ஏதும் கூறாமல் அமைதியாக இருந்தார்

8. இயேசு எதனைப் பயன்படுத்தி சோதனைகளை வென்றார்?
   இறைவார்த்தையை பயன்படுத்தி

-----------------------------------------

### பகுதி – 2

1. இயேசுவிற்கு ஏற்பட்ட முதலாவது சோதனையையும் அவர் கூறிய பதிலையும் தருக?
   சோதனை- கற்களை அப்பமாக்குமாறு கட்டளை இடப்பட்டது
   பதில்- மனிதன் அப்பத்தினால் மட்டும் வாழ்வதில்லை

2. இயேசுவிற்கு ஏற்பட்ட இரண்டாவது சோதனையையும் அவர் கூறிய பதிலையும் தருக?
   சோதனை- நீர் என்னை வணங்கினால் அனைத்தும் உம்முடையதாகும்
   பதில்- உன் கடவுளாகிய ஆண்டவரை வணங்கி அவர் ஒருவருக்கே பணி செய்வாயாக

3. யேசுவிற்கு ஏற்பட்ட மூன்றாவது சோதனையையும் அவர் கூறிய பதிலையும் தருக?
   சோதனை- நீர் இறைமகன் என்றால் இங்கிருந்து குதியும் உம்மைப் பாதுகாக்கும் படி இறைவன் தம் தூதர்களுக்கு உம்மைக் குறித்துக் கட்டளையிடுவார்கள் என்றும் உமது கால் கல்லில் மோதாத படிக்கும் அவர்கள் தம் கைகளால் தாங்கிகொள்வார்கள் என்றும் மறைநூலில் எழுதியுள்ளது

   பதில்- உன் கடவுளாகிய ஆண்டவரை சோதிக்க வேண்டாம்

## அலகு 07

### மலைப்பொழில் வாழ்வு வளமடைகின்றது.

## பகுதி – 1

1. இயேசு தமது போதனைகளுக்கு எப்படியான இடங்களைத் தெரிவுசெய்தார்?
   அமைதியான இடங்களை

2. பொதுமக்கள் இயேசுவின் போதனைகளை கேட்க வந்தது ஏன்?
   அவரது போதனைகள் எளிமையானதாக இருந்தமையால்

3. இயேசு தமது போதனைகளுக்கும் கற்பித்தலுக்கும் எங்குள்ள வளங்களைப் பயன்படுத்தினார்?
   யூத சமூகத்தில் காணப்பட்ட வளங்களை பயன்படுத்தினார்.

4. இயேசுவின் மலைப்பொழிவுப் போதனை திருவிவிலியத்தில் எங்குள்ளது?
   மத்தேயு 5 – 7ம் அதிகாரம்

5. “நீங்கள் உலகிற்கு.......................... இருக்கின்றீர்கள்”
   ஒளியாக

------------------------------------------

## பகுதி 2

1. பொன் விதி யாது?
   “பிறர் உங்களுக்குச் செய்ய வேண்டும் என விரும்புகின்றவற்றை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்.” இறைவாக்குகளும் திருச்சட்டமும் கூறுவது இதுவே.

2. இயேசு தெரிவுசெய்த அமைதியான இடங்கள் எவை?
   மலையுச்சி, சமவெளி, கடற்கரையோரம், திறந்தவெளி, வீடுகள்.

3. அடிக்கடி இயேசுவைச் சூழ்ந்து காணப்பட்டோர் யார்?
   ஏழைகள், பெண்கள், சிறுவர்கள், நோயுற்றோர், வரிதண்டுவோர்.

4. இயேசு தமது போதனைக்குப் பயன்படுத்திய விடயங்கள் அல்லது உதாரணங்கள் எவை?
   ஆட்டுக்குட்டி, கடுகு, உப்பு, விளக்கு, ஒளி, திராட்சைத் தோட்டம், அத்திமரம், வலை, முத்து.

5. பிறர் உங்களிடம் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்று விரும்புகின்றீர்கள்?
   கௌரவப்படுத்தல்,
   செவிமடுத்தல்,
   அன்புகாட்டுதல்,
   பகிர்தல்,
   சமமாக மதித்தல்,
   நேர்மையை கடைப்பிடித்தல்,
   நட்பு காட்டல்,
   உண்மையுள்ளவராக நடந்துகொள்ளல்,
   வாக்குறுதியை நிறைவேற்றுபவராக இருத்தல்.

அலகு 08

## இறை விருப்பத்தை நிறைவற்றுவோம்

### பகுதி – 1

1. இறுதித் திருவிருந்தில் இயேசுவுடன் பங்குபற்றியோர் யார்?
   அவருடைய பன்னிரு சீடர்கள்

2. ஆண்டவரின் இறுதித் திருவிருந்தினூடாக அவர் நமக்கு எதனை வெளிப்படுத்துகின்றார்?
   இறைவனுக்கும் எமக்கும் இடையிலான உடன்படிக்கையை வெளிப்படுத்துகிறார்.

3. இறுதித் திருவிருந்தில் அப்பம் எதைக் குறிக்கின்றது?
   இயேசுவின் திருவுடலைக் குறிக்கின்றது.

4. இரசம் எதைக் குறிக்கின்றது?
   இயேசுவின் திரு இரத்தத்தை குறிக்கின்றது

5. இயேசு யாருடைய பாதங்களைக் கழுவினார்?
   சீடர்களுடைய கால்களை கழுவினார்.

6. சீடர்களின் கால்களை இயேசு எதனால் துடைத்தார்?
   அவர் தமது இடுப்பில் கட்டியிருந்த துணியால்.

7. "ஆண்டவரே நீரா என் பாதங்களைக் கழுவுவது" என்று யேசுவைக் கேட்டது யார்?,
   தூய பேதுரு

8. கெத்சமனே தோட்டத்திற்கு இயேசுவுடன் சென்ற சீடர்கள் யார்?
   பேதுரு, யோவான், யாக்கோபு

9. தாழ்மையுடன் பணிசெய்வதன் முக்கியத்துவத்தை இயேசு எவ்வாறு செயலில் காண்பித்தார்?
   தம் சீடர்களின் கால்களை கழுவி முன்மாதிரி காட்டியதன் மூலமாக

------------------------------------------------------

### பகுதி 2

1. இயேசு நமது பாவங்களுக்காக தம்மை சிலுவையில் அர்ப்பணிப்பதற்கு முன் இடம்பெற்ற மூன்று நிகழ்வுகளும் எவை?
   1. ஆண்டவரின் இறுதித் திருவிருந்து.
   2. சீடர்களின் கால்களை கழுவியமை.
   3. கெத்சமனே தோட்டத்தில் இறை வேண்டல் செய்தமை.

2. இறுதி திருவிருந்தில் இயேசு கிண்ணத்தை எடுத்து என்ன கூறினார்?
   "இதில் உள்ளதை என் நினைவாக பருகுங்கள், ஏனெனில் இது என் உடன்படிக்கையின் இரத்தம், இது பலருடைய பாவமன்னிப்புக்காக சிந்தப்படும் என் இரத்தம்" என்றார்.

3. "நீர் என் காலடிகளைக் கழுவ விடமாட்டேன்" என்று கூறிய பேதுருவுக்கு இயேசு என்ன கூறினார்?
   "நான் உன் காலடிகளை கழுவாவிட்டால் என்னோடு உனக்கு பங்கில்லை" என்றார்.

4. இயேசு கெத்சமனி தோட்டத்தில் எவ்வாறு ஜெபித்தார்?
   "என் தந்தையே இத் துன்பக் கிண்ணம் என்னை விட்டு அகலட்டும், ஆனாலும் என் விருப்பப்படி அல்ல உம் விருப்பப்படி நிகழட்டும்" என்றார்.

5. இயேசு விண்ணப்பம் செய்து முடித்த பின்னர் சீடர்களை நோக்கி வந்து என்ன சொன்னார்?
   "எழுந்திருங்கள் போகலாம், இதோ என்னைக் காட்டிக்கொடுப்பவன் நெருங்கி வந்துவிடான்" என்றார்.

**அலகு – 09**

## சிலுவை மொழிகளின் முன்மாதிரி

**பகுதி – 1**

1. இயேசு சிலுவையிலிருந்து கூறிய முதல் வார்த்தையின் மூலம் எதை வெளிப்படுத்தினார்?
   நமக்கு எதிராக துன்பம் விளைவித்தவர்கள் மீது கருணை காட்ட வேண்டும் என்பதை.

2. இயேசுவுக்கு சிறுவயதுமுதல் யாருடைய அன்பும் பாதுகாப்பும் கிடைத்தது?
   அன்னை மரியாவினதும், தந்தை யோசேப்பினதும் அன்பும் பாதுகாப்பும்.

3. சிலுவையில் அறையப்பட்ட வேளையில் அன்னை மரியாவிடம் யாரை ஒப்படைத்தார்?
   தமது அன்புச் சீடனான யோவானை.

4. ''எல்லாம் நிறைவேறிற்று'' என்னும் வார்த்தையில் வெளிப்படும் பொருள் யாது?
   இயேசு தமது உயிரை பெரிதெனக் கருதாமல் தந்தையின் திட்டத்தை நிறைவேற்றும் பொருட்டு நமது மீட்புக்காக தனது உயிரைக் கொடுத்தார் என்பது.

5. இயேசு சிலுவையிலிருந்து கூறிய வார்த்தைகள் எத்தனை?
   ஏழு

---

**பகுதி - 2**

1. சிலவை மொழிகள் மூன்றை தருக?
   1. ''தந்தையே இவர்களை மன்னியும், ஏனெனில் தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்குத் தெரியவல்லை''
   2. ''அம்மா இவரே உம் மகன்'' என்றார், சீடரிடம் ''இவரே உம் தாய்'' என்றார்.
   3. ''எல்லாம் நிறைவேறிற்று''

2. உங்கள் பெற்றோருக்கும் பராமரிப்பாளர்களுக்கும் நீங்கள் செய்ய வேண்டியவை யாது?
   1. கீழ்ப்படிந்திருத்தல்
   2. உதவி செய்தல்
   3. கனிவுடன் பேசுதல்
   4. சுகவீனத்தில் அன்புடன் பராமரித்தல்
   5. பிரச்சனைகள் மத்தியில் உதவி செய்தல்.

3. ''எல்லாம் நிறைவேறிற்று'' என்னும் வார்த்தையில் வெளிப்படும் பொருள் யாது?
   இயேசு தமது உயிரை பெரிதெனக் கருதாமல் தந்தையின் திட்டத்தை நிறைவேற்றும் பொருட்டு நமது மீட்புக்காக தனது உயிரைக் கொடுத்தார் என்பது.

4. ''எல்லாம் நிறைவேறிற்று'' என்னும் வார்த்தையின் மூலம் நாம் பெறும் படிப்பினை என்ன?
   கிறீஸ்தவ பிள்ளைகள் என்னும் வகையில் கல்வியை சிறப்புடன் கற்றுக் கொள்வதோடு வாழ்வில் எம்மிடம் ஒப்படைக்கப்படும் அனைத்துச் செயல்களையும் பொறுப்புடன் நிறைவேற்றுதல் வேண்டும், இதற்கு நாள்தோறும் இயேசு வழிகாட்டுகின்றார் என்னும் பாடம் சொல்லித்தரப்படுகின்றது.

அலகு - 10

## எல்லோருக்கும் ஓர் எதிர்பார்ப்பு

### பகுதி – 1

1. இயேசு மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்தபின் எத்தனை நாட்கள் சீடரோடு தங்கியிருந்தார்?
   நாற்பது நாட்கள்

2. மக்களில் அநேகர் யாருக்குப் பயந்து எவ்வித எதிர்பார்ப்பும் அற்றவர்களாக வாழ்ந்தார்கள்?
   யூதருக்குப் பயந்து.

3. ''ஆண்டவரைக் கண்டோம்'' என சீடர்கள் சொன்னதை நம்பாதவர் யார்?
   தோமா

4. இயேசுவை ஆண்டவர் என அறிவித்த முதல் சீடர் யார்?
   தோமா

5. உயிர்த்த இயேசுவில் நம்பிக்கை கொண்ட தோமா அவரை எவ்வாறு அழைத்தார்?
   ''நீரே என் ஆண்டவர், நீரே என் கடவுள்'' என்று.

---------------------------------------

### பகுதி 2

1. இயேசு உயிர்த்தெழுந்ததை நம்பாத தோமா என்ன சொன்னார்?
   ''ஆணிகளால் ஏற்பட்ட காயத்தினுள் என் விரலை இட்டு அவர் விலாவில் என் கையை விட்டாலன்றி நான் நம்பமாட்டேன்'' என்றார்.

2. தோமாவைக் கண்ட இயேசு என்ன சொன்னார்?
   ''இதோ என் கைகள் இங்கே உன் விரலை விடு, உன் கையை நீட்டி என் விலாவில் இடு, ஐயம் தவிர்த்து நம்பிக்கை கொள்'' என்றார்.

3. தோமாவின் வாழ்வில் ஏற்பட்ட மாற்றம் என்ன?
   இயேசுவே ஆண்டவர், உயிருடன் வாழும் கடவுள் அவரே என விசுவசித்து ஐயமின்றி சான்றுபகர்ந்தார்.

அலகு – 11

## தூய ஆவியில் புத்தொளி

### பகுதி – 1

1. பெந்தகோஸ்து நிகழ்வு பற்றி கூறப்பட்டுள்ள திருவிவிலிய நூல் எது?
   திருத்தூதர் பணிகள் நூல்

2. பெந்தகோஸ்து தினத்தன்று தைரியமாக உரையாற்றிய சீடர் யார்?
   தூய பேதுரு

3. பெந்தகோஸ்து நிகழ்வுபற்றி முன்னரே இறைவாக்குரைத்த இறைவாக்கினர் யார்?
   இறைவாக்கினர் யோவேல்

4. பெந்தகோஸ்து தினத்தன்று தூய பேதுருவின் உரையை கேட்டு எத்தனை பேர் இயேசுவை ஏற்றுக்கொண்டார்கள்?
   சுமார் ஏறக்குறைய மூவாயிரம் பேர்

5. பாஸ்கா விழாவிற்குப் பின் எத்தனையாம் நாள் பெந்தகோஸ்து திருவிழா கொண்டாடப்படுகின்றது?
   ஐம்பதாம் நாள்

6. இந்நாளில் எதனைக் காணிக்கையாகச் செலுத்துவர்?
   அறுவடையின் முதல்ப் பலனை

7. பெந்தகோஸ்து திருவிழாவின் போது சீடர்கள் எங்கே கூடியிருந்தார்கள்?
   எருசலேமில் கூடியிருந்தனர்.

8. சீடர்கள் யாருக்கு பயந்து கதவுகளை மூடியிருந்தனர்?
   யூதருக்குப் பயந்து

9. பெந்தகோஸ்து நாளில் யாருடைய வருகை இடம்பெற்றது?
   தூய ஆவியின் வருகை

10. தூய ஆவியன்செயல் எதன் செயலுக்கு ஒப்பிடப்படுகின்றது?
    காற்றின் செயலுக்கு

---------------------------------------

### பகுதி 2

1. பெந்தகோஸ்தே தினத்தில் எருசலேமில் கூடியிருந்தவர்கள் யார்?
   புதிதாக தெரிவுசெய்யப்பட்ட சீடர்கள், பன்னிரு அப்போஸ்தலர்கள், பலநாட்டு மக்கள், பலமாழி பேசும் யூத மக்கள்.

2. பெந்தகோஸ்தே தினத்தில் நடந்த சம்பவங்கள் எவை?
   - கடும் காற்று வீசுவது போன்ற இரைச்சல்,
   - நெருப்புப் போன்ற பிளவுற்ற நாவுகள் எல்லோர் தலையிலும் அமர்ந்தது,
   - எல்லோரும் வெவ்வேறு மொழிகளில் பேசினார்கள்.

3. நெருப்பைப்பற்றி திருவிவிலியத்தில் கூறப்படுபவை யாவை?
   - எரியும் முட்செடியின் நடுவிலிருந்து வந்த குரலெளி வடிவில் மோசேயின் அழைப்பு.
   - இஸ்ராயேல் மக்களின் விடுதலைப் பயணத்தில் நெருப்புத் தூண் வழிகாட்டியது.
   - பேந்தகோஸ்து நாளில் நெருப்புப் போன்ற பிளவுற்ற நாவுகள் எல்லோர் தலையிலும் அமர்ந்தது

4. இங்கு நெருப்பு எதனை குறிக்கின்றது?
   பயமின்றி சான்றுபகர தேவையான வல்லமையை இறைவன் அளித்தார் என்பதை குறிக்கின்றது.

5. பிறமொழிகளில் பேசினாலும் எல்லோரும் அவரவர் மொழிகளில் புரிந்துகொண்டனர் என்பது எதனைக் குறிக்கின்றது?
   தூய ஆவியானவரின் வல்லமை நிறைந்த செயலை.

அலகு – 12

## ஆரம்ப கிறிஸ்தவ சபை

பகுதி – 1

1. திருச்சபை எப்போது ஆரம்பமானது?
   பெந்தகோஸ்து தினத்தன்று

2. யூதர்கள் இறைவார்த்தையை எங்கு கற்றுக்கொண்டனர்?
   தொழுகைக்கூடங்களில்

3. ஆரம்ப திருச்சபையினர் யாருடைய தலைமைத்துவத்தின் கீழ் கூடினர்?
   திருத்தூதர்களின் தலைமைத்துவத்தின் கீழ்

4. திருத்தூதர்களும் விசுவாசிகளும் வீடுவீடாகச் சென்று என்ன செய்தனர்?
   இறைவேண்டலிலும் அப்பம் பிடுதலிலும் ஈடுபட்டனர்.

5. அவர்களது ஒன்றிப்பு வாழ்வை எடுத்துக்காட்டிய நிகழ்வு யாது?
   உணவை பகிர்ந்து உண்டமை.

6. சீடர்களது அப்பம் பிட்குதல் நிகழ்வு பிற்காலத்தில் எவ்வாறு மாறியது?
   ஆண்டவரின் திருவிருந்தாக மாறியது.

7. ஆரம்ப திருச்சபையினர் தமது உடமைகளை விற்று யாருடைய பாதத்தில் வைத்தனர்?
   திருத்தூதரின் பாதத்தில்

8. இறைவனோடு ஒன்றித்து வாழ அவசியமானது எது?
   ஜெபமும், இறைவார்த்தையும்.

--------------------------------------------

பகுதி - 2

1. திருச்சபை என்றால் என்ன?
   தூய ஆவியின் வல்லமை பெற்று விசுவாசத்துடனும் இறை பயத்துடனும் இறைவனுக்கு சான்றுபகரும் கூட்டம்.

2. ஆரம்ப திருச்சபையிலிருந்த மக்களின் பண்புகள் யாவை?
   ஐக்கியம், போதனை, அப்பம் பிட்குதல், விண்ணப்பம், அனைத்தையும் பொதுவாக வைத்திருத்தல்.

3. இறைவார்த்தைகளை கற்றுக்கொள்வதற்கு தொழுகைக்கூடங்களில் உதவியாக இருந்தோர் யார்?
   மறைநூல் அறிஞர்கள், தொழுகைக்கூடத் தலைவர்கள்.

4. தூய ஆவியை பெற்றுக்கொண்ட சீடர்கள் என்ன செய்தனர்?
   ஆர்வமுடன் போதனை செய்தனர், இயேசுவின் மரணம் மற்றும் உயிர்ப்பிற்கு சான்றுபகர்ந்தனர்.

5. உடமைகளை பொதுவாக வைத்திருந்தமை எதனை அடையாளப்படுத்துகின்றது?
   ஒருவருக்கு ஒருவரிடையே அன்புறவை வளர்த்து பொதுவுடமையை பேணுதலையும் குறிக்கின்றது.

## அலகு – 13

## குணமளிக்கும் இறைவன்

### பகுதி – 1

1. பெந்தகோஸ்து திருநாளின் போது கால் ஊனமுற்றவனை குணமாக்கியவர்கள் யார்?
   தூய பேதுருவும் தூய யோவானும்

2. இச்சம்பவம் விவிலியத்தில் எந்த நூலில் உள்ளது?
   திருத்தூதர் பணிகள் நூலில்

3. பெந்தகோஸ்து திருநாளின் போது குணமடைந்த கால் ஊனமுற்றவர் அமர்ந்திருந்த இடம் எது?
   எருசலேம் தேவாலயத்தின் அழகுவாயில் என்னுமிடத்தில்

4. பெந்தகோஸ்து திருநாளின் போது குணமடைந்த கால் ஊனமுற்றவர் என்ன செய்து கொண்டிருந்தார்?
   எருசலேம் தேவாலயத்தின் அழகுவாயில் என்னுமிடத்தில் பிச்சை எடுத்துக்கொண்டு இருந்தார்.

5. பேதுருவும் யோவானும் எதில் நம்பிக்கை வைத்து கால் ஊனமுற்றவனை குணமாக்கினர்?
   இயேசுவின் நாமத்தில் நம்பிக்கை கொண்டு

----------------------------

### பகுதி 2

1. பேதுருவும் யோவானும் கால் ஊனமுற்றவரிடம் என்ன கூறினர்?
   ''வெள்ளியும் பொன்னும் என்னிடம் இல்லை, என்னிடம் இருப்பதை உமக்கு கொடுக்கின்றேன், நாசரேத்து இயேசு கிறிஸ்துவின் பெயரால் எழுந்து நடவும்'' என்றனர்.

2. இந்த நிகழ்வு எமக்கு தரும் படிப்பினை என்ன?
   நாம் பிறருக்கு உதவி செய்ய வேண்டும்.
   இறைவன் எமக்க தந்துள்ள தாலந்துகளை பயன்படுத்த வேண்டும்.
   இயேசு தமது சீடர்கள் மூலம் தமது நற்செய்திப் பணியை தொடர்ந்தாற்றினார்.
   இயேசு கிறிஸ்துவின் பெயரால் நாம் கேட்கின்ற நன்மைத்தனங்கள் யாவும் எமக்கு கிடைக்கும்.

3. பேதுரு இயேசுவின் நாமத்தில் எவ்வாறு கட்டளையிட்டார்?
   ''இயேசு கிறிஸ்துவின் பெயரால் கட்டளையிடுகிறேன் எழுந்து நடவும்'' என்றார்.

4. ஊனமுற்றவர் சுகம் பெற்றதும் என்ன செய்தார்?
   துள்ளியெழுந்து கடவுளைப் போற்றினான், வாழ்நாளில் செல்ல முடியாத கோவிலுக்குள் சென்று கடவுளைப் போற்றினான்.

அலகு – 14

## இறைவார்த்தையை பின்பற்றுவோம்.

### பகுதி – 1

1. இயேசு கற்றுக்கொடுத்த செபம் எது?
   ''விண்ணுலகில் இருக்கின்ற எங்கள் அன்புத் தந்தையே..'' என்ற செபம்

2. இயேசு கற்பித்த செபத்திலுள்ள பொதுவான பண்புகள் எவை?
   புகழ்ச்சி, தாழ்ச்சி, விண்ணப்பம், கடமை

3. இயேசு கற்பித்த செபத்தில் பொதுநலமாக பயன்படுத்தப்படும் சொல் என்ன?
   எங்களுக்கு என்ற சொல்

4. கிறிஸ்தவ வாழ்வின் அடிப்படை அம்சம் யாது?
   விசுவாசம்

5. செபிக்கும் போது யாரைப்போல இருக்க வேண்டாம் என இயேசு கூறியுள்ளார்?
   வெளிவேடக்காரரைப் போன்று

---------------------------------------------------

### பகுதி 2

1. பகைவரிடம் நாம் எவ்வாறு இருக்க வேண்டும் என இயேசு கூறியுள்ளார்?
   பகைவரிடம் அன்பு கூரவேண்டும், எங்களை துன்புறுத்துவோருக்காக இறைவனிடம் வேண்டுதல் செய்ய வேண்டும்.

2. நாம் இறைவனிடம் எவ்வாறு வேண்டுதல் செய்ய வேண்டும் என இயேசு கற்பித்துள்ளார்?
   ''உள்ளறைக்குச் சென்று, கதவைப் பூட்டி உங்கள் தந்தையிடம் வேண்டுங்கள், மிகுதியான சொற்களை அடுக்கிக்கொண்டு போக வேண்டாம்'' என.

3. எங்கள் குற்றங்கள் எப்போது மன்னிக்கப்படும் என இயேசு கற்பித்த ஜெபத்தில் சொல்லப்படுகின்றது?
   பிறர் குற்றங்களை நாங்கள் மன்னிக்கும் போது எங்கள் குற்றங்களும் மன்னிக்கப்படும்.

4. இறைவார்த்தையை கேட்டு நடப்பவர் எதற்கு ஒப்பானவர்கள் என இயேசு கூறினார்?
   பாறை மீது வீட்டைக் கட்டியவனுக்கு ஒப்பானவர்கள்.

5. இறைவார்த்தையை கேட்டு அதன்படி நடவாதோர் எதற்கு ஒப்பானவர்கள் என இயேசு கூறினார்?
   மணல் மீது வீட்டைக்கட்டிய அறிவிலிக்கு ஒப்பானவர்கள்.